முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத் துறைத்தலைவர்)
அலுவலகம், சென்னை–32,
கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்),
அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு.தெபாஷீஷ் ஜானா, இ.வ.ப.,

செ.மு.ஆ.எண் எம்2/7577/2022 நாள்.19.06.2023

பொருள்: பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற திரு.பி.புருஷோத்தமன் என்பவரின் மகன் திரு.பு.வினோத், இளநிலை உதவியாளருக்கு பணி வரன்முறை செய்து தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலக இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.எம்2/7577/2022, நாள்.26.04.2022
2. உதவி இயக்குநர், அரசு தேர்வுகள் உதவி இயக்குநர், சென்னை ந.க.எண்.014931/அ6/2022, நாள்: 08.11.2022
3. அரசாணை எண்.(Ms).33, தொழிலாளர் நலத்துறை மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (Q1), நாள்: 08.03.2023

*****

ஆணை:

பார்வை 1ல் காணும் செயல்முறை ஆணையின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு வனத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.பு.வினோத், இளநிலை உதவியாளர், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) சென்னை அலுவலகத்தில் 27.04.2022 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் கடிதத்தின்படி, திரு.பு.வினோத், இளநிலை உதவியாளருக்கு மெய்தன்மை சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 3ல் காணும் அரசாணையின்படியும், TNGS (Conditions of Service) Act, 2016 Section 28ன்படியும் இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பின்வருமாறு பணிவரன்முறை செய்தும், மூன்றாண்டு கால தொடர் பணிக்குட்பட்டு இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் திருவாளர் | பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை ப்படுத்தப்பட்ட நாள் | தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.பு.வினோத் | இளநிலை உதவியாளர் | 27.04.2022 முற்பகல் | 27.04.2022 முற்பகல் | 27.04.2022 முற்பகல் |

கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
அலுவலகம், சென்னை-32

பெறுநர்
திரு.பு.வினோத், இளநிலை உதவியாளர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) அலுவலகம், சென்னை - 32

நகல். "ண" பிரிவு

நகல். இருப்புக் கோப்பு 2023/பணிப்பதிவேடு